| | |
|---|---|
| அனுப்புனர்<br>திருமதி. மோ. சியாமளா,<br>மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட சமூக நல அலுவலகம்,<br>காஞ்சிபுரம். | பெறுநர்<br>சமூக நல ஆணையர்,<br>சமூக நல ஆணையரகம்,<br>லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,<br>காமராஜர் சாலை,<br>சென்னை 600 005. |

ந. க.எண்.139/அ1/2024 நாள்: 14.03.2024

அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | சமூக நலன் - மாவட்ட சமூக நல அலுவலகம் – காஞ்சிபுரம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் , 2013 - புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள் (Nodal officers) நியமித்தல் தொடர்பாக. |
| பார்வை | 1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு ,தடை மற்றும் தீர்வு )சட்டம் 2013.<br>2. சமூக நல ஆணையர் , சென்னை அவர்களின் நே.மு.ந.க எண் 58645/WW2(3) /2013, நாள்: 29.10.2019.<br>3. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் 3325/SRCW/2024, நாள்: 11. 03. 2024.<br>4. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை செ. மு. ந. க.எண்.139/அ1/2024, நாள்: 14 .03.2024 |

---

பார்வையில் காணும் கடிதத்தின் படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் ( தடுப்பு, தடை மற்றும் தீர்வு )சட்டம், 2013 -ன் படி வருவாய், கோட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் புகார் மனுக்களை பெறுவதற்கு ஏதுவாக இணைப்பில் கண்டவாறு மையமுனை அலுவலர்கள் (Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது

14/3/24

மாவட்ட சமூக நல அலுவலர்,

காஞ்சிபுரம்.

## காஞ்சிபுரம் மாவட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை

## முன்னிலை: திருமதி கலைச்செல்வி மோகன் இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண்.139/அ1/2024 நாள்:14.03.2024

| | |
|---|---|
| பொருள்: | சமூக நலன் - மாவட்ட சமூக நல அலுவலகம் - காஞ்சிபுரம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் , 2013 - புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுக்கா, கோட்டம், வட்டாரம், ஒன்றியம் மற்றும் நகராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள் (Nodal officers) நியமித்தல் தொடர்பாக. |
| பார்வை : | 1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு ) சட்டம் 2013.<br>2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் நே.மு.ந.க எண் 58645/WW2(3)/2013, நாள்: 29.10.2019.<br>3. சமூக நல ஆணையர் , சென்னை அவர்களின் ந.க.எண் 3325/SRCW/2024, நாள்: 11.03.2024. |

---

ஆணை :

பார்வை 1 ல் தெரிவித்துள்ளபடி காஞ்சிபுரம் மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட அளவில் உள்ளூர் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புகார் மனுக்களை பெறுவதற்கு மாநகராட்சி அளவில் மாநகராட்சி ஆணையர் அவர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும், தாலுக்கா அளவில் வட்டாட்சியர்களையும், கோட்டம் அளவில் கோட்டாட்சியர்களையும், ஊராட்சி ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களையும் (Nodal Officers) கீழ்க்கண்டவாறு நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாநகராட்சி | மாநகராட்சி ஆணையர், காஞ்சிபுரம் |
| 2. | குன்றத்தூர் நகராட்சி | நகராட்சி ஆணையர், குன்றத்தூர் |
| 3. | மாங்காடு நகராட்சி | நகராட்சி ஆணையர், மாங்காடு |
| 4. | காஞ்சிபுரம் கோட்டம் | கோட்டாட்சியர், காஞ்சிபுரம் |
| 5. | ஸ்ரீ பெருமந்தூர் கோட்டம் | கோட்டாட்சியர், ஸ்ரீ பெருமந்தூர் |
| 6. | காஞ்சிபுரம் வட்டம் | வட்டாட்சியர், காஞ்சிபுரம் |
| 7. | ஸ்ரீ பெருமந்தூர் வட்டம் | வட்டாட்சியர், ஸ்ரீ பெருமந்தூர் |
| 8. | குன்றத்தூர் வட்டம் | வட்டாட்சியர், குன்றத்தூர் |
| 9. | வாலாஜாபாத் வட்டம் | வட்டாட்சியர், வாலாஜாபாத் |
| 10. | உத்திரமேரூர் வட்டம் | வட்டாட்சியர், உத்திரமேரூர் |

| | | |
|---|---|---|
| 11. | காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 12. | ஸ்ரீபெருமந்தூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 13. | குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 14. | வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| 15. | உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் | வட்டார வளர்ச்சி அலுவலர் |

14/3

மாவட்ட ஆட்சித் தலைவர்

காஞ்சிபுரம்.

14/3/24

2/3

பெறுநர்

சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.

நகல்

சமூக நல ஆணையர்,

சமூக நல ஆணையரகம்,

லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,

காமராஜர் சாலை,

சென்னை-600005. (நகல் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)